**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 562** **நாள்: 10.10.2026**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், எத்திராஜ் மகளிர் கல்லூரியில் இன்று நடைபெற்ற அலர்ட் கோல்டன் ஆர்மி' (ALERT Golden ARMY) வழங்கிய 'ஐடரெல்லா 26' (Aiderella 26) "முகமூடிக்கு அப்பால் - மாறுவேடத்தில் நாயகர்கள்" முதலுதவிக்கான பிரம்மாண்டமான திருவிழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மாணவர்களுடன் கலந்துரையாடி சிறப்புரையாற்றினார்.**

இன்று (10.10.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற அலர்ட் கோல்டன் ஆர்மி' (ALERT Golden ARMY) வழங்கிய 'ஐடரெல்லா 26' (Aiderella 26) "முகமூடிக்கு அப்பால் - மாறுவேடத்தில் நாயகர்கள்" முதலுதவிக்கான பிரம்மாண்டமான திருவிழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மாணவர்களுடன் கலந்துரையாடி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக, மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில் போதைப் பொருள் ஒழிப்பு உறுதிமொழியினை கல்லூரி மாணவியர் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், கல்லூரி தலைவர் திரு.வி.எம்.முரளிதரன், அமெனிட்டி லைஃப்லைன் அவசரக்காலப் பதிலளிப்புக் குழு (ALERT) நிறுவனர் மற்றும் தலைவர், கல்லூரி துணைத் தலைவர், மாணவியர் கலந்து கொண்டனர்.

அலர்ட் கோல்டன் ஆர்மி கிளப் என்பது, மருத்துவ அவசர காலங்களில் பயிற்சி பெற்ற முதலுதவியாளர்களாக கல்லூரி மாணவர்களை மேம்படுத்தும் ஒரு மாணவர் தலைமையிலான முன்னெடுப்பாகும். இந்த முன்னெடுப்பு, ஒரு விபத்து அல்லது இதய அவசரநிலையைத் தொடர்ந்து வரும் முக்கியமான முதல் ஒரு மணி நேரமான "பொன்னான நேரத்தை" முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்துகிறது. இதற்காக, மாணவர்களுக்கு சி.பி.ஆர்., முதலுதவி மற்றும் அவசரகால பதில் நடவடிக்கை போன்ற அத்தியாவசிய உயிர்காக்கும் திறன்களை இது வழங்குகிறது.

நேரடிப் பயிற்சிப் பட்டறைகள், மாதிரி அவசரகால ஒத்திகைகள் மற்றும் விழிப்புணர்வு முன்னெடுப்புகள் ஆகியவற்றின் மூலம், தொழில்முறை மருத்துவ உதவி வருவதற்கு முன்பே திறம்படச் செயல்படத் தயாராக இருக்கும், நம்பிக்கையும் திறமையும் வாய்ந்த முதலுதவியாளர்களைக் கொண்ட ஒரு வளாகச் சமூகத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இன்று போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

நமது முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறிய விதை போட்டார். அந்த விதைதான் இன்றைக்கு ஒரு பெரிய மரமாக, அதாவது ஐந்து லட்சத்து ஐம்பாயிரம் (5.5 Lakhs) சமூகத் தொண்டர்களை (Volunteers) உருவாக்கியுள்ளது. அதற்கான விதையைப் போட்டவர் அப்துல் கலாம் அவர்கள். அதில் நானும் ஒரு சிறிய பங்கை ஆற்றியுள்ளேன். 2021 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் சிறிய சிறிய பங்களிப்புகளைச் செய்துள்ளேன்.

ஆனால் அலெர்ட் அமைப்புக்கு 5.5 லட்சம் தொண்டர்கள் அடங்கிய பெரிய ராணுவத்தை போன்று உருவாக்கியதற்கு பாராட்டுகிறேன். எத்திராஜ் கல்லூரியில் 8,000 மாணவர்கள் படிக்கிறார்கள், அதில் கிட்டத்தட்ட 4,000 பேர் பயிற்சி பெற்றுள்ளனர் என்று சொன்னார்கள். இது ஒரு பெரிய சாதனை. உங்கள் மாணவர்களில் 50 சதவீதம் பேர் முதல் கட்ட மீட்பாளர்களாக (First Responders) பயிற்சி பெற்றுள்ளனர். இது பாராட்டத்தக்கது.

பொதுவாக ஒரு விபத்து நடக்கும் பொழுது அதனை தீவிரமாக எதிர்கொள்வதற்கு தைரியம் இருக்க வேண்டும், அதற்கு நம்பிக்கை இருக்க வேண்டும். உங்கள் அனைவருக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது.

இந்த அற்புதமான நிகழ்வை ஏற்பாடு செய்த எத்திராஜ் கல்லூரி நிர்வாகத்திற்கும், பங்கேற்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று பேசினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**